பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 09 திங்கட்கிழமை [25-11-1991] UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 356

# தெற்கில் எதிரணி பிளவுபடும் நிலை!

## ஸ்ரீமா - சந்திரிகாவுடன் காமினி; லலித் கோஷ்டியுடன் அனுரா

கொழும்பு, நவம்பர் 25

தென்னிலங்கையில் பெரும் அரசியல் மாற்றங்கள், திருப்பங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இப்போது அரசாங்கத்துக்கு எதிராகவுள்ள அணியில் மிக விரைவில் பெரும் அரசியல் குத்துக்கரணங்கள் நிகழவிருப்பதாக அவர்கள் ஆருடம் தெரிவித்துள்ளனர்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அவரது மகள் சந்திரிகா குமாரணதுங்கா, திரு. காமினி திசநாயக்கா, அவரது ஆதரவாளர்கள் ஒரு பிரிவாகவும்—

திரு. அனுரா பண்டாரநாயக்கா மற்றும் திரு. லலித் அத்துலத்முதலி, திரு. பிரேமச்சந்திரா ஆகியோர் மற்றப் பிரிவாகவும்—

பிளவுபடும் கட்டம் வந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீமாவோ பக்கத்தில் சுதந்திரக் கட்சியில் உள்ள அவரது ஆதரவாளர்கள், சந்திரிகாவின் பகுஜன கட்சியின் ஆதரவாளர்கள், காமினி தலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் அவ்ரோ நேற்று அகோர குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 25

மணலாறு மாவட்டத்தில் நேற்றுக்காலை முதல் மதியம் வரை "அவ்ரோ" விமானம் அகோரக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

நாயாறு, அலம்பில் பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களில் உடைமைகள் பல சேதமடைந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

மணலாறுப் பகுதியில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவுக்கும், ஆனையிறவில் இருந்து பூநகரிக்கும் இடையில் படையினர் நடமாட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்கின்றனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-த-3)

## ஜி.சீ.ஈ. அனுமதி அட்டைகள் இன்று இங்கு வந்து சேரும்

யாழ்ப்பாணம், நவ. 25

எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று அல்லது நாளை இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் தங்கியுள்ள கல்விப் பணிப்பாளர் இந்த அனுமதி அட்டைகளைக் கப்பல் மூலம் இங்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

பரீட்சைக்கான வினாத்தாள்களை எதிர்வரும் ஐந்தாம் திகதியளவில் இங்கு அனுப்பவும் கொழும்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-3)

## சார்க்கைக் கூட்ட 7 நாடுகளும் இணக்கம்

சார்க் உச்சி மாநாட்டை கூடிய விரைவில் கொழும்பில் நடத்த ஏழு அங்கத்துவ நாடுகளும் இணங்கியுள்ளன.

அடுத்த மாத பிற்பகுதியில் அல்லது ஜனவரி மாத முற்பகுதியில் இம்மாநாட்டை நடத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

மாநாட்டை நடத்துவதற்கான திகதியை மட்டுமே இன்னும் முடிவு செய்ய வேண்டியிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(உ-எ)

## தமிழ் கிராம சேவையாளர் கிழக்கில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை இராணுவத்தினர் கடந்த புதன்கிழமை மண்டூரவெளி, படையாண்டவெளிப் பகுதிகளில் தேடுதல் நடத்தினர்.

தேடுதல் நடந்த சமயம் கிராமசேவையாளர் ஒருவரைக் கைதுசெய்த படையினர் அவரைச் சித்திரவதை செய்து, சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மகிழடித்தீவு கிராமசேவையாளரான—மூன்று பிள்ளைகளின் தந்தையான—விஜயரத்தினம் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

அந்தப் பகுதியில் பல இளைஞர்களையும் கைது செய்த படையினர் அவர்களைச் சித்திரவதைக்கு உட்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐதேவேகள, கடந்த வியாழன்று வாழைச்சேனை இராணுவ முகாமில் இருந்து ரோந்து சென்ற படையினர் பனிச்சங்கேணி பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட தம்பிஐயா சின்னராசா (60 வயது) என்பவரைக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-3)

## மாவீரர் சமாதியில் போராளிகள் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 25

மாவீரர் வாரத்தின் நான்காவது நாளான நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் நினைவஞ்சலிக் கூட்டங்களும், மரம் நடும் நிகழ்ச்சிகளும், சிரமதான வைபவங்களும் சிறப்பாக நடந்தன.

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து விடுதலைப் புலிகள் போராளிகளும், தமிழீழக் காவல்துறையினரும் கோண்டாவில் தலைமையகத்துக்கு அணிவகுத்துச் சென்று அங்கு அமைந்துள்ள மாவீரர் சமாதியில் அஞ்சலி செலுத்தினர்.

அணிவகுப்பைக் காண்பதற்காக வீதிகளின் இருமருங்கிலும் மக்கள் கூடிநின்றனர்.

மாவீரர் சமாதிக்குப் போராளிகள் அஞ்சலி செலுத்தியபின்னர் மாவீரர் அரங்கில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த அரசண்ணா தலைமையில் நடந்த கூட்டத்தில் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மாறன், கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

(அ-3)

## 'லில்லி' கப்பல் இன்று வரும்?

யாழ்ப்பாணம், நவ. 25

அவசர திருத்த வேலைகளுக்காக பொருள்களை இறக்கும் வேலையை இடையில் நிறுத்திவிட்டு திருகோணமலைக்குத் திரும்பிச் சென்றிருந்த 'லில்லி' கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ-3)

## தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

மானிப்பாய், உடுவில், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த தமிழீழ மீட்பு நிதி கடன் பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வைத்து கடன் மீளளிக்கப்படவிருக்கிறது.

(க)

## முச்சந்தி முரளி



## இன்று ஊரடங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று திங்கள் காலை 8 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுவதாக கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

நேற்று (ஞாயிறு) காலை 8 மணி முதல் வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுப் பிற்பகல் 2 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுல் செய்யப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-எ)

### கடத்தல் முறியடிப்பு:

## 57 இரத்தினக் கற்கள் வயிற்றிலிருந்து மீட்பு!

இரத்தினக் கற்களை விழுங்கி, இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். கைதானவர் இலங்கையர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரது வயிற்றுக்குள் இருந்து இதுவரை 57 இரத்தினக் கற்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும், இன்னும் சில கற்கள் வயிற்றுக்குள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-த)

### தெரிவுக் குழு முன்னிலையில்

## ஒருமித்த திட்டம் சமர்ப்பிக்க முயற்சி

கொழும்பு, நவ. 25

இனப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிய நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னால், கருத்து ஒருமித்த திட்டம் ஒன்றைச் சமர்ப்பிப்பது குறித்து கொழும்பில் தமிழ்க் குழுக்கள் தங்களுக்குள் கலந்தாலோசித்து வருகின்றன.

இது தொடர்பாக தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் பேச்சு வார்த்தைகளை நடத்தும் முன்முயற்சியில் தமிழ்க் குழு ஒன்று முன்னின்று ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சமரசத் திட்டம் ஒன்றைக் கூட்டாகத் தயாரிப்பதில் கொழும்பில் உள்ள தமிழ்க்குழுக்கள் வெற்றி கண்டால்—

அந்த யோசனை குறித்து பிரதான எதிர்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தி அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள தமிழ்க் குழுக்கள் முயற்சிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### அச்சக இயந்திரங்கள் விற்பனை

Krause ஆங்கில பேப்பர் கட்டர், Otley ஆங்கில சிலிண்டர் மெஷின் (டபிள் கிறவுண் அளவு) விற்பனைக்குண்டு: இ: சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/1002)

### தேவை

இலுப்பை அரப்புத் தேவை. நியாய விலையில் வாங்கப்படும். மில்க்வைற். (C/ 0925)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூட்டீ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [இ-0798]


## ரி. ஆர். ஓ. உதவி

வடமராட்சி, நவ: 25

மாவீரர் தினத்தை முன்னிட்டு, தடுத்து வைக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு புடைவைகள், கொப்பிகள் வழங்க வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கழகத்தில் பதிவு செய்துள்ள இராணுவ நடவடிக்கையால் உயிரிழந்த, உடல் ஊனமுற்ற, மற்றும் காணாமற்போன குடும்பங்களுக்கும் உலர் உணவு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த - 165)

## அவசர கால சட்டம் நீடிப்பு

கொழும்பு, நவ: 25

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை 52 அதிகப்படியான வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

121 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 69 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

(இ - த)


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பதவிகள்:

1. சமஸ்கிருதத்தில் உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
2. இடைவரவு விரிவுரையாளர்

(அ) கிறிஸ்தவ நாகரிகம்-
- [i] பழைய ஏற்பாட்டியல்
- [ii] புதிய ஏற்பாட்டியல்
- [iii] கிறிஸ்தவ மெய்யியல்
- [iv] திருச்சபை வரலாறு

(ஆ) இந்து நாகரிகம்
- [i] இந்துக் கலையும் கட்டடமும்
- [ii] இந்து விக்கிரகவியல்
- [iii] ஆகமங்கள்

(இ) சமூகவியல்

சம்பள அளவுத்திட்டம்:

1. உதவி விரிவுரையாளர் ரூபா 3, 900/- மாதமொன்றுக்கு (நிலையானது) (துறைத் தலைவரினாலும், பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4, 500/- 10 x 200/- 6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்)

2. இடைவரவு விரிவுரையாளர் - ரூபா 150/- (மணித்தியாலத்திற்கு)

இடைவரவு விரிவுரையாளரின் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி - 1991 — 12 — 13 உம், உதவி விரிவுரையாளர் சமஸ்கிருதத்திற்கான பதவிக்கான முடிவு திகதி - 1991 — 12 — 23 உம் ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தாபனக் கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23 x 10 சதம மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணம்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1991-13-12 [சி 0928]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கந்தையா செல்லம்மா

மலர்வு: 1925 - 08 - 03 உதிர்வு: 1990 - 12 - 05


திதி: 1991 — 11 — 25

அன்பினை அள்ளித் தந்து, பண்பினொடு பேணிக் காத்து, [வையகம் போற்ற எம்மையெல்லாம்] வாழ்வாங்கு வாழ வழி செய்த எமது குடும்பத்தின் ஒப்பற்ற ஒளி விளக்கேற்றித் துலங்கி எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்ற அன்பு நிறை தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சித் துதிக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

வேம்போடுகேணி,
பளை. [18837]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்

### இராஜசிங்கம் இராஜமனோகரன்

(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

தோற்றம்: 07 - 07 - 1934 மறைவு: 25 - 05 - 1991

வீட்டின் ஒளி விளக்காய் இருந்து திடீரென எங்களை விட்டுப் பிரிந்த அப்பாவின் ஆத்மா சாந்தியடைய காசி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

"இராஜகிரி"
தெல்லிப்பளை. (4388)


## க. பொ. த. சாதாரணதரம்

# பொதுப் பரீட்சை

| திகதி | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| 30-11-1991 சனி | ஆங்கில மொழி I 08-30 — 09 30<br>ஆங்கில மொழி II 09-30 — 11-30 | கணிதம் I 12-30 — 01-30<br>கணிதம் II 01-30 — 04-30 |
| 01-12-1991 ஞாயிறு | விஞ்ஞானம் I 08 00 — 09 00<br>விஞ்ஞானம் II 09 00 — 12-00 | வரலாறும் சமூகக்கல்வியும் I 01-00—02-00<br>வரலாறும் சமூகக்கல்வியும் II 02-00—05-00 |
| 07-12-1991 சனி | தமிழ் மொழியும் இலக்கியமும் I 08-30 — 09-15<br>தமிழ் மொழியும் இலக்கியமும் II 09-15 — 11-15 | தமிழ் மொழியும் இலக்கியமும் III 12-30—02-30 |

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தமது அனுமதி அட்டைகளை 27 - 11 - 1991 அன்று பெற்றுக் கொள்ளவும்.

பரீட்சைப் பகுதி

யூனிவேர்சல் கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[இ-0930]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ராவ் விரும்பும் நட்பு எது?

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ், ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு பிரேமதாசாவுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் எழுதிய கடிதம் பல அரசியல் மாற்றங்களைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கலாம்.

குறிப்பாக இந்தியாவுக்கும், ஸ்ரீலங்காவுக்கும் இடையில் உருவாகியுள்ள கசப்புணர்வையும், ஒருவரை மற்றவர் நம்பாத தன்மையையும் போக்குவதற்கு இந்தக் கடிதம் பெரிதும் உதவும்.

ஜனாதிபதி பிரேமதாசா, இந்திய விரோதப் போக்குடையவர் என்ற எண்ணம் இந்திய அதிகாரிகள் மட்டம் தொடக்கம் அரசியல்வாதிகள் வரை நிலையாகப் பதிந்து விட்ட ஒன்று. அதன் பிரதிபலிப்பாகவே கொழும்பில் இம்மாத ஆரம்பத்தில் நடக்கவிருந்த சார்க் உச்சி மாநாட்டை இந்தியா குழப்பியது.

உச்சி மாநாடு நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு இந்தியாவே பின்னணியில் செயலாற்றியது என்றவாறு ஸ்ரீலங்கா அரசு நேரடியாக விரலைச் சுட்டியது. இதன் விளைவாக இந்திய-ஸ்ரீலங்கா உறவுகள் மேலும் பாதிக்கப்படும் அபாயம் ஒன்று உருவாகியிருந்தது.

ஆனால் நரசிம்மராவின் இப்போதைய கடிதம் அந்த அபாயத்தைத் தவிர்த்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்தவும், நட்பை இறுக்கமாக்கவும், பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வை வளர்க்கவும் தாம் விருப்பம் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

அவ்வாறு இந்தியாவும் ஸ்ரீலங்காவும் நண்பர்களாகி விட்டால் இரு நாடுகளுக்கும் நற்பயன் கிடைக்கும், வெளியே நண்பர்களாக நடித்துக் கொண்டு, எப்போது அடுத்தவர் முதுகில் குத்தலாம் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கும் அல்லது உருவாக்கும் நட்பு என்றால் அது எதிரிகளாக இருப்பதை விடப் பேராபத்திலேயே முடியும்.

நரசிம்மராவ் விரும்பும் நட்பு எத்தகையது என்பதை இப்போது ஊகிக்க இயலாது. செயல் மூலம் கிடைக்கும் அனுபவத்திலிருந்து, காலம் செல்லச் செல்லவே தெரிய வரும்.

அதே போல, நரசிம்மராவின் நட்புக் கரத்தை பிரேமதாசா சந்தேகக் கண்ணோடு பார்க்காமல் இறுகப் பற்றிக் கொள்வாரா என்பதையும் உடனடியாகச் சொல்ல முடியாது.

எப்படியோ, எதுவானாலும் சரி, கொழும்பு - புதுடில்லி நட்பு, ஈழத் தமிழர்களை நசுக்குவதில் இணைந்து செயற்படுவதாக இருக்கக் கூடாது என்பதே எமது அக்கறை.

அந்த நட்பு ஈழத் தமிழர்களின் உரிமைகளை, சுதந்திரத்தை வழங்குவதற்கு உதவுமானால் வரவேற்கலாம். தமிழர்களின் உரிமைகளை வழங்காமல் அவர்களை அடக்கி ஆள்வதற்குக் கூட்டாகச் சதி செய்யும் நட்பாக இருந்தால் அது பேராபத்தை விளைவிக்கும்.

இது விடயத்தில் ஈழத்தமிழர்கள் மிகவும் உன்னிப்பாகவும், எச்சரிக்கையுடனும் நிலைமையை அவதானித்துச் செயற்பட வேண்டும்.

புலிகளின் கப்பலிலிருந்து

# கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஏலத்தில் விற்கப்படுமாம்

## வெடி மருந்துகள் மட்டும் அரச பொறுப்பில்

சென்னை, நவ. 25

சென்ற ரங்கர் கடற்பகுதியில் வைத்து இந்திய கடற்படை வீரரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்த பொருள்களில் வெடிமருந்துகள் தவிர ஏனைய பொருள்கள் அனைத்தும் ஏலத்தில் விடப்படும்.

இப்படி தமிழக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பலில் கைப்பற்றப்பட்ட பொட்டாசியம் நைத்திரேற், அலுமினியம் பவுடர் போன்றவையும் கண்ணி வெடிகள் ஆகியவையும் இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும்—

இவற்றைக் கொண்டு ரூபா 5 கோடி பெறுமதியான வெடிகுண்டுகள் தயாரிக்கலாம் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவை தவிர்ந்த ஏனைய பொருள்களே ஏலத்தில் விடப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-த)

ராஜீவ் கொலைவிசாரணை நடக்கும்

# 'மல்லிகை' அலுவலகம்முன் நடமாடிய யாழ்வாசி கைது!

சென்னை, நவ. 25

சென்னை, கிரீன்வேஸ் வீதியில் ''மல்லிகை'' அலுவலகம் முன்னால் நள்ளிரவு வேளையில் ஓட்டோவில் வந்திறங்கிய, யாழ்ப்பாணம் இளைஞரை பொலீஸார் துப்பாக்கி முனையில் மடக்கிப் பிடித்தனர்.

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் சிறப்புப் புலனாய்வுத் துறையினர் ''மல்லிகை'' அலுவலகக் கட்டடத்திலேயே செயற்பட்டு வருகின்றனர் என்பது தெரிந்ததே.

கடும் பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ள அந்தப் பகுதியில் வைத்து கைதான இளைஞர் யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த தயாளன் என்றழைக்கப்படும் ஜெயக்குமார் [24 வயது] எனத் தெரிவிக்கப்பட்டது.

ஓட்டோவில் வந்திறங்கிய அந்த இளைஞர் ''மல்லிகை'' அலுவலகத்தின் உள்ளே பிரவேசிக்க முயன்ற சமயமே, பொலீஸார் கைது செய்தனர் என்று கூறப்பட்டது.

விசாரணையின் போது சம்பந்தப்பட்ட இளைஞர் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி அல்லர் என்பது தெரிய வந்தது.

கைதான சமயம், அவர் குடிபோதையில் இருந்தது கண்டுபிடிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# வவுனியா மாவட்ட அரச ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப காலக்கெடு

வவுனியா மாவட்டத்தை விட்டு இடம் பெயர்ந்த சகல அரசாங்க ஊழியர்களும் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் வேலைக்குத் திரும்பி விட வேண்டும் என்று அரசாங்கம் கோரி உள்ளது.

வேலைக்குத் திரும்பத் தவறுவோர் தாமாகவே வேலையை விட்டு விலகியவர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதே போன்ற எச்சரிக்கை தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த அரச ஊழியர்களுக்கும் விடுக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன் கடமைக்குத் திரும்புமாறு அவர்கள் கோரப்பட்டிருந்தனர். [இ த]

தமிழகத்திலிருந்து வரும் அகதிகளை

# திருமலையில் தங்கவைக்கும் ஏற்பாடுகள் பூர்த்தியாம்

திருகோணமலை, நவ. 25

தமிழகத்திலிருந்து திருமலைக்கு வரும் அகதிகளை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்து விட்டதாக திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் ஏ. சுப்பிரமணிய சர்மா தெரிவித்துள்ளார்.

இங்கு வரும் அகதிகள் ஹோட்டல் கிளப் ஏஷியா, ஹோட்டல் சீ லோர்ட் ஆகியவற்றில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படுவர். அவர்களுக்கு 1 வார காலத்துக்கு சமைத்த உணவும் வழங்கப்படும். மேலும் நிவாரண உதவி மாக பணம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஹோட்டல்களில் தங்கியிருப்போர் சொந்த வீடுகளுக்கு திரும்பும் பட்சத்தில் அனுமதிக்கப்படுவர். ஏனையோர் தற்காலிகமாக தங்கியிருக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவித்தார். [த]

## விசாரணைக்கு கோரிக்கை

சென்னை - நவ. 25

விடுதலைப் புலிகளுக்கு தி. மு. க. வினர் ஆதரவு அளிப்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். இப்படி தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. வி. தண்டாயுதபாணி கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுடில்லியில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர் விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் அளித்ததற்காக தி. மு. க. எம். பி. ஒருவரின் சகோதரர் அண்மையில் கைது செய்யப்பட்டிருப்பது தி. மு. க. வுக்கும் புலிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருப்பதைப் புலப்படுத்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார். (இ - த)

# மீட்புநிதி மீள பெறுவோர்

தமிழீழ மீட்புநிதி செலுத்தியோரில் கடன் மீளளிப்புப் பெறத் தெரிவான குடும்பங்களின் கடன் மீளளிப்புப் பத்திர இலக்கங்கள் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகத் தொடர்ந்து வெளிவருவது தெரிந்ததே. மற்றொரு தொகுதி பட்டியல் வருமாறு:

### வெளியகல்வு

தை — 1991

யா/வெ

| | | | |
|---|---|---|---|
| 508 | 608 | 622 | 648 |
| 680 | 792 | 1670 | |

மாசி

யா/வெ.

| | | | |
|---|---|---|---|
| 32 | 614 | 815 | 967 |
| 1533 | | | |

பங்குனி

யா/வெ.

| | | | |
|---|---|---|---|
| 08 | 538 | 546 | 847 |
| 908 | | | |

சித்திரை

யா/வெ.

| | | | |
|---|---|---|---|
| 84 | 471 | 864 | 1145 |
| 1610 | | | |

வைகாசி

யா/வெ.

| | | | |
|---|---|---|---|
| 117 | 352 | 779 | 944 |

ஆனி

யா/வெ.

| | | | |
|---|---|---|---|
| 53 | 77 | 555 | 1620 |

ஆடி

யா/வெ.

| | | | |
|---|---|---|---|
| 178 | 638 | 765 | 966 |

ஆவணி

யா/வெ.

| | | | |
|---|---|---|---|
| 59 | 200 | 643 | 718 |

புரட்டாதி

யா/வெ.

| | | |
|---|---|---|
| 289 | 812 | 1368 |

ஐப்பசி

யா/வெ.

| | | |
|---|---|---|
| 109 | 922 | 928 |

கார்த்திகை

யா/வெ.

| | | |
|---|---|---|
| 719 | 905 | 1031 |

### வடமராட்சி கிழக்கு

பங்குனி — 1991

யா/வ. கி.

| |
|---|
| 180 |

சித்திரை

யா/வ. கி.

| | |
|---|---|
| 79 | 310 |

வைகாசி

யா/வ. கி.

| | |
|---|---|
| 416 | 516 |

ஆனி

யா/வ. கி.

| | |
|---|---|
| 406 | 426 |

ஆடி

யா/வ. கி.

| | |
|---|---|
| 362 | 787 |

ஆவணி

யா/வ. கி.

| | |
|---|---|
| 281 | 779 |

புரட்டாதி

யா/வ. கி.

| | |
|---|---|
| 14 | 717 |

ஐப்பசி

யா/வ. கி.

| | |
|---|---|
| 40 | 117 |

கார்த்திகை

யா/வ. கி.

| | |
|---|---|
| 527 | 870 |

### கரவெட்டி

மாசி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 116 | 285 | 334 | 417 |
| 571 | 581 | 616 | 922 |
| 959 | 986 | 1274 | 1936 |
| 3479 | 4662 | | |

பங்குனி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 61 | 83 | 313 | 326 |
| 399 | 438 | 494 | 575 |
| 631 | 644 | 841 | 990 |
| 1979 | 2442 | 2649 | |

சித்திரை

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 29 | 188 | 218 | 217 |
| 397 | 673 | 1235 | 1987 |
| 2397 | 2594 | 2689 | 3482 |
| 4012 | 4029 | | |

வைகாசி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 07 | 37 | 168 | 302 |
| 314 | 572 | 760 | 2426 |
| 3458 | 3472 | 4285 | 4416 |

ஆனி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 35 | 912 | 931 | 1925 |
| 1967 | 2514 | 2833 | 3649 |
| 4510 | 4904 | 5232 | |

ஆடி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 139 | 187 | 208 | 751 |
| 831 | 1692 | 2011 | 2331 |
| 2829 | 4160 | 4712 | |

ஆவணி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 96 | 489 | 663 | 696 |
| 739 | 813 | 962 | 1603 |
| 4164 | 4224 | 4659 | |

புரட்டாதி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 362 | 381 | 408 | 837 |
| 845 | 2139 | 2848 | 3264 |
| 4026 | 4727 | | |

ஐப்பசி

யா/க.

| | | | |
|---|---|---|---|
| 42 | 301 | 410 | 590 |
| 880 | 891 | 914 | 2434 |
| 4136 | 4310 | | |

கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 332 | 380 | 823 | 1328 |
| 1553 | 1852 | 2249 | 3506 |
| 4338 | 4824. | | |

## அரச அதிபருக்கு மேலதிக பதவி

வவுனியா, நவ. 25

வவுனியா மாவட்டத்தில் மேலும் நிலைமைகளை வழமைக்குக் கொண்டு வரும் மற்றொரு நடவடிக்கையாக வடக்கு - கிழக்கு மாகாண சபையில் மேலதிக செயலாளராக வவுனியா அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## வழக்கறிஞர் கைது மனு மீதான தீர்ப்பு இன்று

சென்னை, நவ. 25

பத்மநாபா கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள திருச்சி வழக்கறிஞர் மருதநாயகத்தைப் பிணையில் விடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும். (த)

## மருந்து விற்பனையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ, 25

யாழ். மாவட்ட ஆங்கில மருந்து விற்பனையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும், (த)

## ''சாவ்'' பார்க்க இலவச டிக்கட்

யாழ்ப்பாணம், நவ. 25

அடுத்த மாதம் 22ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள ''சாவ்'' விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பதற்கு இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் இரண்டு சிறுவர்களுக்கு இலவச டிக்கட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இதன் பொருட்டு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வங்கிக் கிளையிலிருந்து ஐந்து சிறுவர்களின் பெயர்கள் அனுப்பப்பட உள்ளன. அதற்கான அதிஷ்டச் சீட்டிழுப்பு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நடைபெற உள்ள மாவீரர் வாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 25
மாவீரர் வாரத்தின் ஐந்தாவது நாளான இன்று பின்வரும் இடங்களில் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு வட்டவையில், குடத்தனை அ.த.க. பாடசாலையிலும்–

பளை வட்டவையில் மாசார் பாடசாலையிலும்—

சாவகச்சேரி வட்டவையில் மீசாலை, விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் —

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு யாழ். மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும்—

தெல்லிப்பழை வட்டவையில் அளவெட்டி வடக்கு அம்மன் கோவிலடியிலும்—

சண்டிலிப்பாய் வட்டவையில் இளவாலை சென் ஹென்றீஸ் பாடசாலையிலும்—

நல்லூர் வட்டவையில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும்— கூட்டங்கள் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் இக்கூட்டங்களில் உரை நிகழ்த்துவர்.

ஒவ்வொரு கூட்ட முடிவிலும் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (த)

## மின்னொளியில் அணிவகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
மாவீரர் வாரத்தை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ காவல் துறையினரும் இணைந்து இன்று இரவு 8 மணிக்கு கல்வியங்காட்டில் மின்னொளியில் அணிவகுப்பு ஒன்றை நடத்தவிருக்கின்றனர். [உ]

# 41ஆம் நாள் நினைவஞ்சலி

## லெப்டினன்ட் நீலன்

[ மயில்வாகனம் சேதுலிங்கம் ]

ஜனனம்: 13 — 02 — 1975



வீரமரணம்: 16 — 10 — 1991


பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில்
எல்லையைக் காத்திட நீ விரைந்தாய்?
இன்னல் சுமைகளில் துப்பாக்கியை சுமந்தாய்
நாளை நம் பாலர்கள்
உன் சரித்திரம் படிப்பர்.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரன், சகோதரி,
மாமன், மாமி, சித்தப்பா,
சின்னம்மா, பேரன்மார்.

புதுவளவு,
வல்வெட்டித்துறை. [இ/0934]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 01 — 11 — 1914



உதிர்வு: 26 — 10 — 1991

## கதிரவேலு சுப்பையா

(ஓய்வு பெற்ற அதிபரும், சமூக சேவையாளரும்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வளர்த்து நல்வழிகாட்டி வாழவைத்து இமைப் பொழுதில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! தாங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாதம் ஆனாலும் உங்கள் பசுமையான நினைவுகள் எமது நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும். அன்னாரின் மரணச் செய்தியைக் கேட்டு எமது துக்கத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

களபூமி,
காரைநகர். [இ-0932]

# மாவீரர் தின நிகழ்ச்சிகள்

★ மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கட்டுறவாளர்கள் நடத்தும் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்க முன்றலில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

★ யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள மாவீரர் தின ஐந்தாவது நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

★ யாழ். பல்கலைக் கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள மாவீரர் வார விசேட நிகழ்ச்சி, இன்று காலை 9-00 மணிக்கு கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

★ மாவீரர் தின விழாவை விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி சமூக பொருளாதார அபிவிருத்தியின் நோக்கோடு கொண்டாடுகிறது. அதன் ஒரு கட்டமாக இன்று மாலை அரியாலை பூம்புகாரில் நடைபெறஉள்ள மாவீரர் தின நிகழ்ச்சிகளின்போது ஆரம்ப சுகாதார நிலையம், ஆரம்பப் பாடசாலை, தும்புத் தொழிற்சாலை ஆகியன திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து எழுச்சிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் ஆயிரம் மாகோக்கனி மரங்கள் நடப்பட இருக்கின்றன.

இந் நிகழ்ச்சி நாளை காலை 9-00 மணிக்கு குடாநாடு அடங்கிலும் நடைபெறுமென கல்லுராட்சி உதவி ஆணையாளர் திரு.டிவகலாலா தெரிவித்துள்ளார். [உ-த-51]

## ஆற்றில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், நவ. 25
திருகோணமலையில் ஆறு ஒன்றைக் கடக்க முயன்ற சமயம் ஆற்றில் மூழ்கி விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான புவிதன் (பாலசிங்கம் சிவானந்தன்-மூதூர்) மரணமடைந்தார். [உ-3]

## பீரங்கி தாக்குதல்

காங்கேசன்துறை, கீ மலை கடற்பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் நேற்று அதிகாலை வேளையில் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை காரைநகர் இராணுவ முகாமில் இருந்தும் பொன்னாலைப் பகுதியை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (ஒ-15)

## தெற்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மையின ஐ.தே.க. ஆதரவாளர்கள் சேர்வார்கள் என்று நேற்றைய "லங்காதீப" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேபோல சுதந்திரக் கட்சியில் உள்ள அனுரா ஆதரவாளர்கள், லலித் தலைமையிலான ஐ.தே.க அதிருப்தியாளர்கள் ஆகியோர் ஒரு குழுவாக இயங்குவர் என்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்காவைச் சேர்க்கும் ஸ்ரீமாவோவின் முடிவைத் தொடர்ந்து தாய்க்கும் மகன் அனுராவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தலைமைப் போட்டியே இந்தத் திருப்பங்களுக்குக் காரணம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கும் கொண்டாட்டம் என்பதுபோல இந்த மாற்றங்கள் ஐ.தே.க. தலைமைக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளதாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# மாவீரர்களின் சாந்திக்கு ஆதீனத்தில் பிரார்த்தனை

மாவீரர் தினமான நாளை மறுதினம் (புதன்கிழமை) மாவீரர்களின் சாந்தி வேண்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெற உள்ளது.

அன்று காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடக்கும் இந்தப் பிரார்த்தனையில் அனைத்து இந்து சமய நிறுவனங்களும், மக்களும் பங்கு பற்றுவர்.

மக்கள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாணை பிறப்பித்துள்ளார்.

நல்லை ஆதீனத்தில் நடைபெறும் பிரார்த்தனையில் கலந்து கொள்வதில் சிரமமேதும் இருப்பின், தாம் இடங்களிலுள்ள இந்து சமய நிறுவனங்களும், மக்களும் ஆங்காங்கே இத்தகைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்து மாவீரர்களின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் கேட்டுள்ளார். [அ]

# ஆனையிறவில் ஷெல் வீச்சு; பயணிகள் பெரும் அவலம்

யாழ்ப்பாணம், நவ. 25
ஆனையிறவுப் படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில், கொம்படி வெளிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதனால் இப்பகுதியால் பயணம் செய்த பெரும் எண்ணிக்கையான பயணிகள் பெரும் அவலத்தை அனுபவிக்க நேரிட்டது.

வாவியில் கொண்டு வந்திருந்த பொதிகள், பைகள் போன்றவற்றை அவர்கள் கடலில் மூழ்கடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

## மட்டக்களப்பில் தாக்குதலாம்

கொழும்பு, நவ. 25
கிழக்கு மாகாணத்தில் படையினர் மேற்கொண்டு வரும் "டே ப்ரேக்—2" இராணுவ நடவடிக்கையில் ஒரு கட்டமாக மட்டக்களப்பு கலிபமடுப் பகுதியில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [ஒ-எ]

## ஹெலி நோட்டம்

கடந்த இரு தினங்களாக வலிகாமம் பகுதிகளில் ஹெலி அடிக்கடி ரோந்து சுற்றி வருகிறது. நேற்றும் வலி-வடக்கு மற்றும் சுன்னாகம், இணுவில் பகுதிகளில் ஹெலி சுற்றி நோட்டமிட்டது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் வயாவிளான், கட்டுவன் பகுதிகளில் சுற்றிய ஹெலி, வேட்டுக்களையும் தீர்த்தது. [ஒ-68]

# மரண அறிவித்தல்கள்

## விநாயகமூர்த்தி சபாநாயகம்

(இளைப்பாறிய D.O.A நீர்ப்பாசன திணைக்களம்)

விநாயகமூர்த்தி சபாநாயகம் அவர்கள் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி விநாயகமூர்த்தி தம்பதிகளின் அன்பு மகனும், சங்கத்தானை காலஞ்சென்ற திரு. திருமதி செல்லையாபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜலட்சுமியின் (இளைப்பாறிய ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், உமாதேவி, வாசுதேவன், கருணாகரன், குமாரலிங், வரதராஜன், சிவநேசன், துளசிதாசன், கதிர்மணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பரமவம்சா, பாஸ்கரி ஆகியோரின் அன்பு மாமனாரும் டினேஸ், பிரகாஸ் ஆகியோரின் பிரியமான அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25 - 11 - 91 (இன்று) பி. ப. 3 30 மணிக்கு பொரளை ஜெயரட்ண மண்டபத்தில் இருந்து ஈமக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;
செ. யோகீஸ்வரன்
(மைத்துனர்)

"கைலாஸ்"
சங்கத்தானை,
சாவகச்சேரி [18789]

## கறுவல்தம்பி கந்தசாமி

யாழ்ப்பாணம் வைமன் வீதியைச் சேர்ந்த கறுவல்தம்பி கந்தசாமி 24-11-1991 நேற்று காலமானார்.

இவர் மகாலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி பராசக்தி, திருமதி கனகேஸ்வரி, சந்திரகாந்தன், சந்திரமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், தட்சணாமூர்த்தி, சிவசோதி, திருமதி இரத்தினகாந்தி ஆகியோரின் மாமனாரும், பவளராணி, விஜயராணி, முரளிதரன், சஞ்ஜீவா, சஜீவன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25-11-1991) 2-00 மணிக்கு இல. 52/6, வைமன் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
இ. சிவசோதி

52/6 வைமன் வீதி,
யாழ்ப்பாணம். (0933)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 : 11 : 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org